செ.வெ.எண்:14 நாள்: 05.10.2017

**திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி பாசன அமைப்பில் உள்ள பாசன பகுதிகளின் பிசானம் சாகுபடிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பாபநாசம் அணையிலிருந்து தண்ணீரினை திறந்து வைத்தார்.**

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி பாசன அமைப்பில் உள்ள நேரடி மற்றும் மறைமுக பாசன பகுதிகளின் பிசானம் சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி பாபநாசம் அணை பகுதியில் இன்று (05.10.2017) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.முருகையாபாண்டியன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பிசானம் சாகுபடி பாசனத்திற்கான தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி பாசன அமைப்பில் உள்ள பகுதிகளுக்கு பிசானம் சாகுபடிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்கு கோடை மேலழகியான் கால்வாய், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையங் கால்வாய், திருநெல்வேலி கால்வாய், ஆகிய 7 கால்வாய்கள் மூலம் 40 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் மேலும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால் கால்வாய், மருதூர் கீழக்கால் கால்வாய், தெற்கு பிரதானக் கால்வாய் மற்றும் வடக்கு பிரதானக் கால்வாய் ஆகிய 4 கால்வாய்கள் மூலம் 46107 ஏக்கர் பாசன வசதி பெறும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மொத்தமாக 86107 ஏக்கர் பாசன வசதி பெறும் இன்று ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு விவசாயிகள் பயிர் செய்வதற்கான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள வேண்டும். நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தினை கருத்தில் கொண்டு நீர் கூடுதலாக திறந்து விடப்படும். இன்று முதல் 31.03.2018 வரை 178 நாட்களுக்கு 12421.70 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறக்கப்படும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்ச்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணைய பெருந்தலைவர் திரு.சக்திவேல்முருகன், தாமிரபரணி வடி நில கோட்ட செயற்பொறியாளர் திரு.சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர்கள் திரு.தங்கராஜ், திரு.பழனிவேல், திரு.அண்ணாத்துரை, திரு.நட்டார், உதவி பொறியாளர்கள் திரு.ஆதிமூலம், திரு.மகேஸ்வரன், தமிழ்நாடு மின்சாரவாரிய செயற்பொறியாளர் திரு.கணேசன், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.கனகராஜ், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி மற்றும் அலுவலர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.